பதிவ எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆனி 20உ (4—7—67) செவ்வாய் ★ வெளியூர் : ஆனி 21உ (5—7—67) புதன் [இதழ் : 17

இந்தியாவுக்கு வருகிறார் பிசோ!

இலண்டன், ஜூலை 3—
நாகர்களின் தேசியக் கவுன்சில் தலைவரான பிசோ, நாகாலாந்து கூட்டாட்சிக்கும்—இந்திய அரசுக்குமிடையே நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில்கலந்து கொள்ளும்பொருட்டு, இலண்டனிலிருந்து இந்தியா வரவிருக்கிறார்.

மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கும்

சென்னை, ஜூலை 3—
"விவசாயம் செய்து பிழைக்கும் ஏழைகளைத் தங்களின் குடியிருப்பு நிலங்களிலிருந்து வெளியேற்றுவதைத் தடை செய்யும் சட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகட்கு நீடிக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. இச்சட்டம், அடுத்த திங்களுடன் காலாவதியாகிறது; எனவே விவசாயிகள், மனைக் கட்டுகளிலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பளிக்கச் சட்டம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

தனிச் சட்டம் உருவாகும்

"பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமாக இருக்கும் ஆயிரக்கணக்கான தரிசு நிலங்களையும் எடுத்துக்கொண்டு விளை நிலங்களாக ஆக்குவதற்குத் தனிச் கட்டம் கொண்டுவருவது பற்றி அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது. இதனால் பத்தாயிரம் விவசாயக் குடும்பங்கள் பயனடையும்.''

—அமைச்சர்
சே. ஏ. மதியழகன்
(சட்டமன்றத்தில்)

கவலைப்படத்தக்க சென்னை தீவிபத்துகள்

உடனடி உதவிகளுக்குத் துரித நடவடிக்கைகள்

சட்டமன்றத்தில் அண்ணா அளித்த ஆறுதல் செய்தி

சென்னை, ஜூலை 4—
"சென்னை நகரில் கவலைப்படத்தக்கவகையில் இருவேறு இடங்களில்—மூன்று இடங்கள் என்றுகூடச் சொல்லலாம்—ஏற்பட்ட தீவிபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான குடிசைவாழ் மக்களின் துயரை அரசு உணர்ந்து உடனடியாக அவர்கட்கு உதவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வீடிழந்தவர்கட்கு வேறு இடம் கொடுக்க அரசு ஆவன செய்துள்ளது. அவர்களுக்கு, மாநகராட்சி மன்றம் உணவளித்து வருகிறது; மற்றும் பல்வேறு பொதுநல நிறுவனங்களும் தாராளமாக உதவிகளை வழங்கிவருகின்றன.

"மேலும், அரசின் விதிமுறைகளுக்கேற்ப என்னென்ன உதவிகள் அளிக்க முடியுமோ அவற்றையெல்லாம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றத்தில் விளக்கமளித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன், டாக்டர் ஹண்டே, வி. கே. கோதண்டராமன் ஆகியோர் தனித்தனியே கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அண்ணா அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்கள்.

"தீ விபத்தைக் குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைப்பதைவிட, இந்த அவை கூடியில்லாத நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் அக்கறை செலுத்திப் பாடுபடுவார்களானால், தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்கட்கு நல்ல பலன் கிட்டும் என்று நம்புகிறேன்''

என்று, அண்ணா அவர்கள் மேலும் கருத்தறிவித்தார்கள்.

பின்னர், அவைத் துணைத் தலைவர் புலவர் க. கோவிந்தன் அவர்கள் தமது தீர்ப்பில், முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் எனக் கருதி தள்ளுபடி செய்கிறேன்' என்றார்.

நிலவரி ரத்து

சென்னை, ஜூலை 4—
புன்செய் நிலங்களுக்கான அடிப்படை நிலவரி ரத்து கீழ்க்கண்ட 10 பாசனத் திட்டங்களின் கீழுள்ள புன்செய் நிலங்களுக்கும் அமுலாகும் :—

அமராவதி நீர்த் தேக்கத் திட்டம்—கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டம்—கீழ் பவானித் திட்டம்—மேட்டூர் கால்வாய்த் திட்டம்—புதிய கட்டளை மேல் மட்டக் கால்வாய்த் திட்டம்—பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம்—புள்ளம்பாடி கால்வாய்த் திட்டம்—சாத்தனூர் திட்டம்—வைகை நீர்த்தேக்கத் திட்டம்—வீடூர் நீர்த்தேக்கத் திட்டம்.

முக்கிய அறிவிப்பு

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற பொது விவாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய வரலாற்று முக்கியம் வாய்ந்த பேருரை முழுவதையும் 'நம் நாடு' இதழில் நாளை முதல் தொடர்ந்து வெளியிடவிருக்கிறோம்.

கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் படித்துணர்ந்துகைவசம் வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்று என்பதாலேயே இதனை முழுமையாக வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ-ர்.)

22 எஞ்சின்களைக் கொண்டு போராடினர் தீயணைப்பு படையினர்

பயங்கரத் தீவிபத்தில் சோகமிக்க நிகழ்ச்சிகள்

சென்னை, ஜூலை 3—
மயிலாப்பூரில், பக்கிங்காம் கால்வாய்க்கும் — முண்டகக்கன்னியம்மன் கோவிலுக்கும் இடையிலுள்ள குடிசைப் பகுதியில் இன்று நடுப்பகலில் ஏற்பட்ட பயங்கரத் தீவிபத்தில் மூவர், தீக்குப் பலியாயினர்.

ஏறத்தாழ 4000 மக்களைக் கொண்ட ஆயிரம் குடும்பங்களுக்குச் சொந்தமான 300 குடிசைகள் எரிந்து சாம்பலாயின.

ஒன்றரை மணி நேரத்தில் தீ அணைக்கப்பட்டது; ஆனால் முழுதும் அணைக்கத் தீயணைப்புப் படையினர் 22 தீயணைப்புப் பொறிகளைப் பயன்படுத்தி ஆறு மணி நேரம் பணிபுரிந்தனர்.

தீவிபத்தினால், ஏற்பட்ட புகை வானத்தில் ஒரு மைல் தூரம்வரை பரவி நின்றது.

சென்னை நகரிலுள்ள 22 தீயணைப்பு நிலையங்களிலிருந்தும் தீயணைப்புப் படையினர் இந்தப் பகுதிக்கு விரைந்துவந்தனர். காவல் துறையினரும் இப்பகுதிக்கு விரைந்தனர். தீவிபத்து ஏற்பட்ட போது காற்று கிழக்கு நோக்கி வீசியதாகக் கூறப்படுகிறது.

தீவிபத்து ஏற்பட்டதும் மக்கள் கூக்குரலிட்டுக்கொண்டு தங்கள் குடிசையையும் பொருள்களையும் விட்டுவிட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர்.

கால்வாய் கரையில் குடியிருந்தவர்கள் கால்வாயில் குதித்துப் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றனர்.

பார்வை இழந்த 60 வயதுள்ள கோவிந்தசாமி என்ற முதியவரும், அவர் குடிசையிலேயே குடியிருந்த மாணிக்கம்மாள் என்பவரும் 5 வயதுள்ள அவருடைய பேத்தியான செயலட்சுமியும் தப்பிவர முடியாமற்போய் தீயில் கருகி மாண்டனர்.

இக்கோர விபத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. அவர்கள், சட்டமன்றத்தினின்றும் அப்பகுதிக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகள் முண்டக்கன்னியம்மன் தோட்டம், அப்பாத்துரை நாயக்கன் தோட்டம், பட்டுநூல்காரன் தோட்டம் ஆகியவையாகும்.

பாதிக்கப்பட்ட மக்களை துணை மேயர் கிருட்டினமூர்த்தி, மாநகராட்சிக் கமிஷனர் அம்பாசங்கர், வட்ட மாநகராட்சி உறுப்பினர் துளசிங்கம் முதலியோர் சென்று பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறி பி.எஸ். பள்ளி, மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளிலும் அவர்கள் தங்குவதற்கும் இரவு உணவுக்கும் ஏற்பாடு செய்தனர்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் ஆறுதல்

கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், தீவிபத்து ஏற்பட்ட இடத்திற்கு இன்று காலை 9-30மணிக்குச் சென்று பார்வையிட்டு,பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

மத்திய அரசின் பழிபோடும் மனப்பான்மை

உர விலை ஏற்றத்தை மறைக்க நெல் விலையை உயர்த்தினர்

அண்ணா -- மதியழகன் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 4—
"மத்திய அரசு நெல் விலையைக் கூட்டியிருப்பது, மலிவு விலையில் கொடுக்கப்பட்டுவந்த இரசாயன உரத்தின் விலையை ஏற்றியதால் அந்தப் பழியை யார் தலையில் போடுவது என்று யோசிப்பதன் விளைவே என நம்புகிறேன்"

என்று, அண்ணா அவர்கள் இன்று சட்டமன்றத்தில் கருத்தறிவித்தார்கள்.

மத்திய அரசு, நெல் விலையைக் கூட்டி நிர்ணயித்திருப்பது தொடர்பான கேள்விகட்கு, உணவமைச்சர் பதிலளித்துக் கொண்டிருந்தபோதே, அண்ணா அவர்கள் குறுக்கிட்டு இக்கருத்தை வெளியிட்டார்கள்.

உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள், துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"தமிழக அரசும், மத்திய அரசும் நெல்லுக்காக நிர்ணயித்துள்ள விலைகளிடையே வேறுபாடு இல்லை. முன்பு மத்திய அரசு குவிண்டாலுக்கு ரூ. 38 என்றுதான் விலை நிர்ணயித்திருந்தது; அந்த விலையை மேலும் கூட்ட முடியாததால், 'விலை' என்ற பெயரில் இல்லாமல் 'போனஸ்' என்ற பெயரில் ரூ. 2 சேர்த்து ரூ. 40 கொடுத்தோம்.

'ஊக்க போனஸ்' என்ற வகையில், ஓர் ஏக்கருக்கு 5 மூட்டை கொடுப்பவர்கட்கு ரூ. 3 வீதம் கொடுத்துவந்தோம்.

இப்போது மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலை ரூ. 43. இதே அளவுக்குத்தான் நாம் கொடுத்து வந்திருக்கிறோம். இதே அளவுதான் இனியும் கொடுக்கப்படும். மேற்கு வங்கத்திலும் ரூ. 43-தான் கொடுக்கிறார்கள்.

விவசாயிகட்கு மேலும் உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில்தான் நீர்ப்பாசன வசதி, பம்பு செட்டு, மின்சார வசதி, முதலியவற்றிற்குக் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்துவருகிறோம்.

மத்திய அரசு நாணய மதிப்பைக் குறைத்ததன் விளைவாக இரசாயன உரங்களின் விலை ஏற்றப்பட்டது. அதை மறைக்கும் வகையிலேயே இப்போது நெல் விலையை உயர்த்தி நிர்ணயித்திருக்கிறது.

மத்திய அரசு ஒவ்வொரு சாகுபடி பருவத்திலும் உள்ள நிலைமைக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்கிறது. நமது மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படும் உற்பத்திச் செலவுகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அந்தந்த மாவட்டக் கலெக்டர்களை விலை நிர்ணயம் செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது."

'இலட்சியத்தை நோக்கி தமிழக அரசு செல்கிறது'

'கல்லூரிப் படிப்பு அனைத்தும் தமிழிலேயே கற்கும் காலம் விரைகிறது'

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூலை 1—

"என்றைக்கேனும் ஒருநாள் கல்லூரிப் படிப்புகள் அனைத்தும் தமிழில்தான் கற்பிக்கப்படப்போகின்றன; அதுதான் அரசின் இலட்சியம்; அந்த இலட்சியத்தை நோக்கி அரசாங்கம் சிறிது சிறிதாக நகர்ந்து கொண்டிருக்கின்றது!"

என்று, கல்வித் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்றத்தில், கல்வி இலாகா மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் விளக்கியதாவது :—

"இந்த ஆண்டிலிருந்தே பி.யு.சி. வகுப்பில், சரித்திரம்—பூகோளம்—பொருளாதாரம் ஆகிய மூன்று பாடங்களும் தமிழில் கற்றுத் தரப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அடுத்த ஆண்டில் விஞ்ஞானப் பாடங்களும் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம.

அடுத்த ஆண்டிலிருந்து பி.ஏ. பட்டப் படிப்பு வகுப்பிலும் சரித்திரம் — பூகோளம் — பொருளாதாரம் ஆகியவற்றைத் தமிழில் கற்பிக்க உத்தரவிட்டிருக்கிறோம்.

இவைகளில் உள்ள கஷ்டம், இதற்குரிய ஆசிரியர்கள் கிடைப்பதுதான்.

மேலும், மேற்படி பாடங்கள் தமிழில் இருக்கின்றனவா—இல்லாவிட்டால் இயற்றவாவது செய்யலாமா—என்ற பிரச்சினைகள் எல்லாம் கலந்து ஆலோசிக்கப்படும்...

ம. பொ. சிவஞானம் :—"போதனை மொழியாகத் தமிழைக் கொண்டுவர வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தாலும், சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் அடிக்கடி பொதுக்கூட்டங்கள் வாயிலாக, ஆங்கிலத்தில் பாடமொழி இருக்கவேண்டியதன் அவசியத்தைக் கூறுகிறாரே—இந்த அரசாங்கம் அம்மாதிரி தடைக்கு என்ன வழி காணும்?"

அமைச்சர் :—"சட்டமன்ற ஆலோசனைக் குழு ஒன்றை இது சம்பந்தமாக ஆலோசனை கூறுவதற்கு அரசாங்கம் நியமிக்க உத்தேசித்துள்ளது."

"மேலும் தமிழ் போதனை மொழிக்குப் பல்கலைக் கழகம் தடையாக இருக்குமானால் பல்கலைக் கழகச் சட்டத்தையே திருத்துவதுபற்றி கூட அரசாங்கம் ஆலோசிக்கும்."

பெண்கள் படிக்கத் தேவை இல்லை என்று தாம் சொன்னதாக வெளியான செய்திகளை மறுத்து அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"படித்துவிட்டு வேலையே செய்யப்போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரியும் பெண்கள், வீணாகக் கல்லூரிகளில் ஒரு குறிப்பிட்ட பிரிவு பாடங்களைப் படித்துவிட்டு—'பாஸ்' செய்துவிட்டு—பிறகு திருமணமாகி வீட்டில் உட்கார்ந்திருப்பதைவிட, படித்த படிப்பினால் அவர்களுக்கும் இலாபமில்லை—நாட்டிற்கும் இலாபமில்லை என்று இருப்பதைவிட உண்மையில் வேலை செய்யவேண்டும்—நாட்டிற்குச் சேவை செய்யவேண்டும் என்று கருத்துடன் படிக்கும் பெண்களுக்கு வழிவிட வேண்டும் என்றுதான் சொன்னேன். பெண்களுக்குக் கல்வி வேண்டாம் என்று நான் சொல்பவன் அல்லன்" என்று கூறினார்.

எஞ்சின் இல்லாத கார்!

எஞ்சின் இல்லாமலும் இரைச்சல் இல்லாமலும் நச்சுப் புகை கக்காமலும் மின்விசையால் ஓடும் லாரி ஒன்றை அமெரிக்காடல் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்து வருகிறார்கள்.

வெள்ளையர் வெளியேற்ற நிகழ்ச்சி

மறைத்து வைக்கப்பட்ட தகவல்களுடன் வரலாறு வெளியாகும்

இலண்டன், ஜூலை 3—

இந்தியப் பிரிவினை—1947-ம் ஆண்டு பிரிட்டிஷார் அதிகாரத்தை மாற்றிக்கொடுத்தது ஆகியன பற்றிய 'இரகசிய' வரலாறு விரைவில் வெளியாகவிருக்கிறது.

"வரலாற்றில் ஒரு பகுதியாக இந்தியாவில் நிகழ்ந்த அதிகார மாற்றம் பற்றிய சான்றேடுகள், விரைவில வெளியிடப்படும்" என்று பிரிட்டிஷ் தலைமையமைச்சர் ஹெரால்டு வில்சன் அறிவித்தார்.

இங்குள்ள இந்தியத் துறை அலுவலகத்திலிருக்கும் ஆவணங்களை வரலாற்றாசிரியர்கள் கட்டுப்பா

(3-ம் பக்கம் பார்க்க)

காவியக் காட்சிகளை ஓவியங்களாகத் தீட்டுவோம்!

கடற்கரையில் காட்சி அமைக்க ஏற்பாடு

உலகத் தமிழ் மாநாட்டுக்கான உன்னதத் திட்டம்— கவிஞர்கட்கு அண்ணா வேண்டுகோள்

சென்னை, ஜூலை 1—

தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தின் முதலாவது ஆண்டு விழா நேற்று மாலை பெரியார் திடலில் உள்ள இராதா மன்றத்தில் நடைபெற்றது.

விழாவையொட்டி சிறப்புக் கவியரங்கமும், பரிசுக் கவியரங்கமும் நடைபெற்றன.

மன்றச் செயலாளர் பொன்னடியான் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் இலக்குவனார் தொடக்க உரையாற்றினார்.

பரலி சு. நெல்லையப்பருக்கு டாக்டர் சி. சி. சங்கரவேலாயுதம் பொன்னாடை போர்த்தினார்.

விழாவில் கலந்துகொண்ட முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு—அவர் உயரத்திற்கு அலங்கரிக்கப்பட்ட கண்ணாடிச் சட்டத்தில் எழுதப்பட்ட வாழ்த்திதழைக் கவிஞர் சுரதா படித்துக் கொடுத்தார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழகத்திலே இன்றைய தினம் நல்ல தமிழ்க் கவிதைகளைத் தரக்கூடிய கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள்.

இந்தத் துறையில் உள்ளவர்கள் வேறு துறையில் புகுவதால் இந்தத் துறையும் கெட்டு அந்தத் துறையும் கெடுகிறது!

வேறு பலர் புகமுடியாதது கவிதைத் துறை. இந்தத் துறையில் உள்ளவர்கள் தமிழ்க் கவிதைகளை நிரம்பத் தரவேண்டும்; நிறைய நூல்களும் வரவேண்டும். 'அவைகளை மக்கள் விலை கொடுத்து வாங்குவார்களா' என்ற அச்சம் தேவையில்லை.

கவிதைக்கு—குறிப்பாகத் தமிழ்க் கவிதைக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

சிந்தித்தால் உரையாற்றலாம்; சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும் தான் கவிதை இயற்ற முடியும்.

தான் கண்டு உள்ளம் நெகிழ்ந்ததை மற்றவர்கள் நெகிழத்தக்க அளவுக்கு அள்ளித் தருவதுதான் கவிதை.

தமிழ் இலக்கியத்திற்கும்—தமிழ்க் கற்பனைக் கவிதைக்கும் வேறுபாடு உண்டு. தெரிந்த பொருளை வைத்துத் தெரியாத பொருளை உவமை காட்டுவது இலக்கியம்.

அறிந்த பொருளைக் காரணம் காட்டி—சான்றுகாட்டி உவமை நயத்தோடு சொல்வது தமிழ்க் கவிதை!

வார்த்தைக்குப் புதுப் பொருளைத் தருவதில் தமிழ்க் கவிஞர்களைப் போல் மற்ற யாரும் கையாளுவதில்லை.

காலத்திற்கேற்ற வடிவத்தைத் தமிழ்க் கவிதை தந்து விடுகிறது!

உலகத் தமிழ் மாநாடு இங்கே நடப்பதால் நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டும். தமிழ் கற்றறிந்தவர்கள் எந்தத் திக்கிலிருந்தாலும்—எந்தத் திசையிலிருந்தாலும்—எந்தநாட்டிலிருந்தாலும் பெருமைப்படுவார்கள்.

இரஷ்யப் பல்கலைக்கழகத்திலிருந்தும், ஜப்பான் பல்கலைக்கழகத்திலிருந்தும், அமெரிக்கப் பல்கலைக்கழகத்திலிருந்தும், மலேசியாவிலிருந்தும் தமிழ் கற்றறிந்தவர்கள் இங்கு வரவிருக்கிறார்கள். அவர்களோடு தமிழ்க் கவிஞர்கள் ஆராய்ச்சி நடத்த வேண்டும்.

மாநாடு நடத்துவது மட்டுமல்லாமல் மாலை நேரத்தில் வரவேற்புக் கூட்டங்களும், சிறப்பு நிகழ்ச்சிகளும் ஏற்படுத்த விருப்பம் கொண்டு இருக்கிறேன்.

பழந்தமிழ் இலக்கியங்களில் காவியங்களில் உள்ள காட்சிகளை ஓவியமாக்கிச் சென்னைக் கடற்கரையில் வைக்கவேண்டும்.

எந்தக் காட்சிகளை ஓவியமாக்கலாம் என்று கவிஞர்கள் என்னிடம் தந்தால், நான் ஓவியர்களோடு அதுபற்றிக் கலந்து பேசுவேன்; அதை ஓவியமாக்கலாம்.

கடற்கரையில் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து பாரதியாருக்கும்—பாரதிதாசனுக்கும் சிலை எடுக்க முடிவெடுத்திருக்கிறோம்.

இந்த மாநாட்டுக்காக பத்து இலட்சம் ரூபாய் செலவு செய்தாலும், நீங்கள் இயற்றித் தருகின்ற இலட்சியக் கவிதைகளுக்கு ஈடாகாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

உங்கள் மூலமாகத் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன். பாரதிதாசன் வாழ்ந்த இல்லம் — கடன் காரணமாக இன்னொருவர் கைக்குப் போக இருந்ததை நான் புதுவை முதல் வரிடத்தில் சொல்லித் தடுத்து நிறுத்திவைத்திருக்கிறேன். அவரால் எவ்வளவுநாளைக்கு தடுத்து வைக்கமுடியும் என்பதை என் அனுபவத்தைக்கொண்டே சொல்லமுடியும்.

அதனைப் பொதுச் சொத்தாக்கி— கல்லூரியாக்க வேண்டும்.

கல்லூரி என்றால், பட்டப் படிப்பு அளிக்கும் கல்லூரி அல்ல; கவிதா இல்லமாக்கி, எல்லோரும் சென்று படித்து மகிழத்தக்க சிறந்த கல்விக் கூடமாக்க வேண்டும்."

இறுதியில் கவிஞர் வேழவேந்தன் எம்.எல்.ஏ. நன்றி கூறினார்.

அண்ணா அளித்த நிதிநிலை அறிக்கை— ஓர் அரசியல் சாசனம்!

வரவு--செலவுத் திட்டத்தின்மீது காஞ்சி என். கிருஷ்ணன் உரை

"இன்றுள்ள அரசியல் அமைப்பு நிலையில் நாம் இன்னும் ஒரு குடியேற்ற நாட்டின் நிலையிலேதான் இருக்கிறோமே தவிர, சுதந்தரம் பெற்ற நாடாக இன்னும் ஆகவில்லை' என்று, 1958-ல், மேற்கு வங்க முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் உரிமை முழக்கம் செய்தார். அவர், துணிச்சலுடன் மத்திய அரசிடம் உரிமையைக் கேட்டதனால்தான், திட்டத்தில், மேற்கு வங்கத்திற்கு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒதுக்கப்பட்டது. ஆகவே, சேலம் உருக்காலை பற்றி கண்டனம்—கிளர்ச்சி—பதவித் துறப்பு என்ற செயல் திட்டத்தை முதலமைச்சர் வெளியிட்டிருப்பது வரவேற்புக்குரியதாகும்"

என்று, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் நா. கிருட்டினன், நிதி நிலை அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் விளக்கியதாவது :—

நிதி நிலை அறிக்கையானது, எந்த ஒரு கட்சி பொறுப்பேற்று ஆட்சியை நடத்திவருகிறதோ அந்தக் கட்சி—நாட்டு மக்களுக்கு தங்களுடைய கொள்கைகள் எவை என்று சொல்லி வந்தார்களோ அவைகளையெல்லாம்—'இன்னின்ன வகையிலே நிறைவேற்றிக் காட்டுவோம்' என்று தொகுத்துக் காட்டுகிற ஓர் அரசியல் சாசனமாகும்.

அந்த வகையிலே அறிஞர் அண்ணா அவர்கள், இந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை மிகச் சிறந்த முறையில் தயாரித்துத் தந்துள்ளார்கள்.

இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கின்ற பொழுது, நமக்கு இருக்கிற குறிப்பிட்ட நிதி வசதியை வைத்து ஒரு குறைந்தபட்ச பற்றுக்குறை நிதி நிலை அறிக்கையைத் தயாரித்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

"அரசியல் அமைப்புச் சட்டத்தில் 12-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான வருவாய் வருகின்ற வரித்துறைகளெல்லாம் மத்திய அரசாங்கத்திற்குத் தரப்பட்டிருக்கின்றன; அந்த வகையிலே மாநில அரசுகள், மத்திய அரசிடம் எதற்கெடுத்தாலும் அதிகமாகக் கையேந்தி நிற்க வேண்டிய நிலையைத்தான் அரசியல் சட்டம் இன்றுள்ள நிலையில் ஏற்படுத்தியிருக்கிறது" என்று வங்க முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய், 1958-ம் ஆண்டிலேயே கூறியிருக்கிறார்.

காலையிலே நாம் பிரஷ் எடுத்துப் பல் தேய்க்கத் துவங்கினால், பிரஷுக்குப் போடப்படுகிற வரியும், பற்பசைக்கான வரியும் மத்திய அரசுக்குத்தான் போகிறது!

காப்பியோ, தேநீரோ குடிக்கத் துவங்கினால், அதற்குப் போடுகின்ற வரியும் மத்திய அரசுக்குத்தான் போகிறது!

சவரம் செய்து கொள்வதற்குக் கத்தி எடுத்தால், அதற்குப் போடுகிற வரியும் மத்திய அரசுக்குத் தான் செல்கிறது!

குளிக்கச் சோப்பு எடுத்தால் அதற்கான வரியும் மத்திய அரசுக்கே போய்ச் சேருகிறது!

அதுமட்டுமல்ல; சிகரெட்டை எடுத்துக்கொண்டால் அதற்குப் போடுகின்ற வரியும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் போய்ச் சேருகிறது!

ஒரு மனிதனின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற இன்றியமையாப் பொருள்களுக்கு போடுகின்ற வரிகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டிருக்கின்ற மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு உரிய பங்கைச் செலுத்துமானால் அதைப் பயன்படுத்தி, மாநில அரசு இந்த நாட்டு மக்களுக்கு நல்லது செய்யமுடியும்.

அந்த வரிகளில் தேவையான பங்கைப் பெறுகின்ற வாய்ப்பைத் தமிழக அரசு, மத்திய அரசிடம் கேட்டுப் பெற வேண்டும்.

நிதி நிலை அறிக்கையில், பஸ் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கிறது; 75 மைல்களுக்கு மேற்பட்ட ரூட்களை எல்லாம் நாட்டுமையாக்கியிருக்கிறார்கள். அவ்வாறு எடுக்கின்ற நேரத்தில் இந்த பஸ்களை வேறு ஊர்களுக்கு—கிராமப்புறங்களுக்கு 75 மைல்களுக்குக் குறைவாக எங்கெந்த ஊர்களுக்குப் பஸ் போக்குவரத்து இல்லாமல் இருக்கிறதோ அந்த ஊர்களுக்கு—பெர்மிட் கொடுப்பது நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதாகும்.

காஞ்சிக்கும் — ஆற்காட்டுக்கும் 28 மைல்கள்; ஆனால், 28 மைல்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டணம் ரூ. 1.30.

அரசுச் சார்பில் காஞ்சியிலிருந்து ஆற்காட்டுக்கோ அல்லது வேலூருக்கோ இரண்டு பஸ்கள் விட்டால் தனியார் பஸ்களில் கட்டணம் குறைக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரிசாவும் இந்தியைக் கை கழுவுகிறது!

உதவிப் பணம் கொடுத்தும் உற்சாக ஆதரவு இல்லை

கட்டாக், ஜூலை 3—

இந்தி கற்பிப்பதற்கு ஒரிசா மாநிலத்தில் எதிர்ப்பு இல்லாவிடினும் இந்திக்கு உற்சாகமான ஆதரவு இல்லை என்றுதான் கூறவேண்டும்.

ஒரிசாவில் இந்தி திணிக்கப்படுவதைச் சில இளம் எழுத்தாளர்களும், பெயர் பெற்ற ஒரிசா கவிஞர்களும் வன்மையாக எதிர்த்து இருக்கிறார்கள்.

காங்கிரசுக் கட்சியின் முழு ஆதரவுடன் 1938-39-ம் ஆண்டில் ஒரிசா மாநிலத்தில் இந்திப் பிரசாரம் தொடங்கப்பட்டது. பள்ளிகளிலும் இந்தி போதனை தொடங்கப்பட்டது; ஆனால், வடநாட்டுக்கும்—தென்னாட்டுக்கும் இடையே இருக்கும் ஒரிசாவில் இந்திப் பிரசாரம் அவ்வளவாக முன்னேறவில்லை.

இந்தி மொழி பேசாத மாநிலங்களில் மாணவர்களுக்கான உதவிப் பணத் திட்டத்தின்கீழ் இந்தி பயிலும் மாணவர்களுக்கு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சில மாணவர்கள் ஆர்வம் காட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. —(யூ.பி.எஸ்.)

ஏழைகள் வயிற்றில் பால் வார்த்தது நிதிநிலை அறிக்கை

எல்லா மக்களும் மனநிறைவு கொள்கின்றனர்

சட்டமன்றத்தில் வி. டி. அண்ணாமலை உரை

சட்டமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து கழக உறுப்பினர் வி.டி. அண்ணாமலை (பெரணமல்லூர்) உரையாற்றுகையில் தெரிவித்ததாவது :—

"விவசாயப் பெருங்குடி மக்களில் நஞ்சை வைத்திருப்பவர்களில் பெரும் பகுதியினர் பெரு நிலக்கிழார்கள்தான்; ஏழை விவசாயிகளில் பெரும் பகுதியினர் புஞ்சைதான் வைத்திருக்கிறார்கள்; எனவே ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்யும் வகையில் புஞ்சை நிலத்துக்கு வரி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; இது, ஏழைகள் வயிற்றில் பால் வார்த்தது போலாகும்.

அதேபோன்று, சிறு வியாபாரிகளுக்கு—சிறு முதலை வைத்துக் கொண்டு வயிற்றைக் கழுவ வியாபாரம் பண்ணுகிறவர்களுக்குச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விற்பனை வரி அதிகாரிகளால் பெரும் தொல்லைக்கு ஆளாகிக்கொண்டிருந்தார்கள் ; அவர்களை அந்தத் தொல்லையிலிருந்து நீக்க உச்சவரம்பை உயர்த்தியிருப்பது அவர்களுடைய வாழ்க்கையிலே வளம் உடைய செய்தியாகும்.

"கோவையிலும், சென்னையிலும் மட்டும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுத்தால் போதுமா ?" என்று கேட்டார்கள். எழும்பூரிலிருந்து புறப்படுகின்ற தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ஒரு மணி நேரத்தில் தூத்துக்குடி போய்ச் சேர்ந்துவிட முடியுமா ? 24 மணி நேரத்திற்குப் பிறகுதான் அது தூத்துக்குடி போய்ச் சேருகிறது.

அண்ணா அவர்கள் மூன்று மாதத்தில் சுமார் 32 இலட்சம் மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஓராண்டுக்குள்ளாகவோ அதற்கும் முன்னதாகவோ மூன்று கோடி மக்களுக்கும் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் விரைவிலேயே கொடுக்கலாம் என்றாலும், முந்தைய அரசு சரியாகக் கொள்முதல் செய்யாமல் மிகமோசமான அளவுக்கு விலைவாசி ஏறுவதற்கு வழி செய்துவிட்ட காரணத்தால் தான், இதிலே சிறிது காலம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

கல்லூரி நிழலைக்கூடப் பார்க்க முடியாத ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளித்திருப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கை நிலையில் முக்கிய மாற்றம் ஏற்பட இருக்கிறது. அந்த வகையில் இந்த நிதி நிலை அறிக்கை எல்லா வகையிலும் எல்லாத் தரப்பினருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய அறிக்கையாக அமைந்திருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

1932-ம் ஆண்டில் 64 படி கொண்ட ஒரு மூட்டை நெல் 3 ரூபாய்க்கு விற்றது; இப்போது அதே ஒரு மூட்டை நெல்லுக்கு ரூ. 32 கிடைக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளாக காங்கிரசுக்காரர்கள் நாட்டைப் பாழ்படுத்தியதன் காரணமாகத்தான் விவசாயிகளுடைய வாழ்வில் மணம் இல்லை.

விவசாயிகள் என்றால்—பெருநிலப் பிரபுக்கள் ஒருவகை; நிலக்கிழார்கள் மற்றொரு வகை; மூன்றாவது—டிரண்டு டேர் நிலத்திலும் சாகுபடி செய்யக்கூடிய குத்தகைதாரர்கள்; நான்காவது—அடிமைகளாக முழு நேரம் வேலை செய்யும் வேலையாட்கள்; ஐந்தாவது—கூலிக்காரர்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒருமுகமாக நிலத்தை விரும்ப வேண்டும்.

பெருநிலக்கிழார்கள் ஆயிரம் ஏக்கர்—இரண்டாயிரம் ஏக்கர் வைத்துக்கொண்டு நிலத்தைப் போய்ப் பார்ப்பதே இல்லை. நிலத்திற்குத் தழை உரமோ போட வேண்டுமா—குப்பை உரம் போடவேண்டுமா—எதைப் போட்டால் நல்லது என்பதுபற்றியெல்லாம் அவர்கள் நினைத்துப் பார்ப்பதே இல்லை.

ஏழை விவசாயி அந்த நிலத்திலே பாடுபட்டு உற்பத்தி செய்தால் அதிலிருந்து எப்படிக் கொள்ளையடிக்கலாம் என்ற நோக்கத்தோடேயே இருக்கிறார்களே தவிர, நிலத்தைப் பேணுவதே இல்லை !

'கடன் கேளாமல் கெட்டது; பயிர் பாராமல் கெட்டது' என்பது போல் நிலத்தைச் சரிவரக் கவனித்தால்தான் பலன் நல்லபடியாகக் கிடைக்கும்.

அந்த நிலையில், 'திராவிட முன்னேற்றக் கழக அரசு நிலத்தைப் பறித்துக் கொள்ளுமா—கம்யூனிஸ்டுக் கட்சி அந்த நிலத்தைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறி பிடுங்கிக் கொடுத்துவிடுமோ என்றெல்லாம் பயந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்திலே அக்கறை இல்லாத காரணத்தால், பயிர் செய்கின்ற தொழிலாளிகளும் நகர்ப்புறத்திற்கு வேலை தேடிச் சென்றுவிடுகிற நிலையும், நிலத்திலே அக்கறை இல்லாத நிலையும் வளர்ந்துவரும் போக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது."

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

அமைச்சர்
சத்தியவாணிமுத்து பாராட்டு

சென்னை, சூன் 30—

சென்னை நக்கீரர் கழகத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் வித்துவான், எம்.ஏ. வகுப்புக்களை —23-ம் ஆண்டுத் தமிழ் வகுப்புக்களை அமைச்சர் சத்தியவாணி முத்து தொடங்கிவைத்தார்.

அமைச்சர் கல்லூரியில் காலடி எடுத்துவைத்ததும், ஏ. ஆர். சி. பள்ளி மாணவியர் இருபுறமும் மலர் தூவி—இசை பாடி வரவேற்ற காட்சி கண்ணுக்கு நல் விருந்து அளித்தன.

விழாவிற்கு திரு. முத்து பி.ஏ. தலைமை வகித்தார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஒரு நல்ல தமிழ் அமைப்பை இவர்கள் கட்டிக் காத்து தமிழ்த் தொண்டு செய்வதை அறிவேன். நான் இத்தனை அறிஞர்கள் மத்தியில் இருப்பது ஒரு தமிழ்ப் பூஞ் சோலையில் இருப்பதாகவே உணருகிறேன்.

இன்று நாட்டில் எல்லா நடவடிக்கைகளிலும் தமிழ் ஆட்சி செய்ய இருக்கிறது. அறிஞர் அண்ணா, செயலாளர்களுக்கும் பிற அமைச்சர்களுக்கும் தமிழிலேயே குறிப்புகள் அனுப்புகிறார்; வாக்கியங்களாக இனிமையான நல்ல தமிழில் எழுதி அனுப்பி எங்களையெல்லாம் ஊக்குவிக்கிறார்.

சட்டமன்ற நடவடிக்கைகள், மிகச் சிறந்த முறையில் தமிழிலேயே நடைபெறுகின்றன. இனி தமிழுக்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு. இங்கு இக்கழகமும், கல்லூரியும் செய்யும் பணிகளுக்கு என்னுடைய ஆதரவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவும் ஆசியும் உண்டு."

கல்லூரித் தலைவர் வித்துவான் க. பழனி பாலசுந்தரனார், வித்துவான் தேர்வு வயதினை 25-ஆகக் குறைக்கவேண்டும் எனவும், மீண்டும் வித்துவான்களுக்கு மேல் அங்கி தரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டு நன்றி கூறினார்.

எழுத்தில்லாத காஷ்மீரி மொழியும் உரிமை கோருகிறது

பள்ளிப் பயிற்சி மொழியாக்க எழுத்தாளர்கள் வலியுறுத்தல்

ஸ்ரீநகர், சூலை 4—

காஷ்மீர் மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் காஷ்மீரி மொழியை அறிமுகப்படுத்த வேண்டுமென்றுகாஷ்மீர எழுத்தாளர் சங்கம், மாநில அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"ஜம்முவில் தோக்ரி மொழிக்கும், லடாக்கில் லடாக்கி மொழிக்கும் உரிய இடம் தரப்பட வேண்டும்" என்று எழுத்தாளர் சங்க மனு கோருகிறது.

"இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நீதிமன்றத்துக்குச் செல்வது உட்பட பிற நடவடிக்கைகளையும் சங்கம் எடுக்க நேரிடும்" என்று அச்சங்கத்தைச் சேர்ந்தவர் 'நேபன்' நிருபரிடம் கூறினார்.

இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 14 மொழிகளில் காஷ்மீரியும் ஒன்றாகும்.

"வட்டார மொழி அல்லது தாய்மொழி ஒன்றுக்கு அதற்குரிய இடத்தைத் தர மறுத்தால், அது இந்திய அரசியல் சட்டத்தை அவமதிப்பதாகும்" என்று எழுத்தாளர் சங்க மனு கூறுகிறது.

பிற மாநிலங்கள் அனைத்திலும் பல்கலைக் கழகப் படிப்பு வரையிலும்கூட வட்டார மொழிகள் பாடமொழிகளாயிருக்கின்றன.

உருது இம்மாநிலத்தின் ஆட்சி மொழியாக இருந்தபோதிலும் அதற்கு வட்டார மொழித் தகுதியைத் தரக் காஷ்மீர எழுத்தாளர்கள் உடன்படவில்லை.

அப்போது தலைமையமைச்சராயிருந்த சேக் அப்துல்லா, 1950-ம் ஆண்டில், காஷ்மீரியைத் தொடக்கப் பள்ளிகளில் பாட மொழியாகக் கொண்டுவந்தார் ; ஆனால் 1953-ஆம் ஆண்டு பதவிக்குவந்த பக்ஷி குலாம் முகம்மது இதை மாற்றிவிட்டார்.

காஷ்மீரிக்கு உரிய தகுதி தருவதில் முதலமைச்சர் சாதிக் அனுதாபம் காட்டுவதாக எழுத்தாளர்கள் நம்புகின்றனர் ; ஆனால் அவரைச் சுற்றியுள்ள சிலர் இதற்கு இடையூறாக இருக்கின்றனராம்.

அண்மைக்காலம் வரையில் காஷ்மீரிக்கு எழுத்தில்லாமலிருந்தது. கடந்த 1947-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் பாரசீக எழுத்து கைக்கொள்ளப்பட்டது; அதன் பிறகு சீர்திருத்தம் ஏற்பட்டு வருகிறது.

காஷ்மீரி எழுத்தாளர்கள் முதன் முதலாக 1965-ம் ஆண்டில், காஷ்மீரி இலக்கிய வரலாற்றைத் தொகுத்தனர். இது 1966-ம் ஆண்டில் 'சிறந்த நூல்' என்ற பரிசைப் பெற்றது. (நேபன்)

எழுச்சி நாள்

கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரவு

"1967-68-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை அளித்துத் தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையில், 'சேலம் உருக்காலைத் திட்டத்தை மத்திய அரசு புறக்கணித்து வந்திடும் போக்கு நீடித்து வருவதால், எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து 'செயல் திட்டம் ஒன்றைத் தீட்டவேண்டும்' என்று கூறியதை, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலச் செயற்குழு முழுமனதுடன் வரவேற்றிருக்கிறது.

"இந்த இயக்கம் வெற்றிபெற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலக் குழு தனது முழு ஒத்துழைப்பையும் தெரிவித்துக் கொள்கிறது.

"சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக சூலை 23-ந்தேதி நடைபெற இருக்கும் இயக்கத்தில் முழுவதுமாகப் பங்கெடுக்கும் அதே சமயத்தில், தூத்துக்குடி துறைமுக விரிவும், சேதுசமுத்திர ஆழ் கடல் திட்டமும் தமிழ்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது எனக் கருதுவதால், அதையும் இவ்வியக்கத்தின் முக்கிய அம்சங்களாக்குவது பொருத்தமாக இருக்கும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறது.

"இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலக் கவுன்சிலின் கீழுள்ள எல்லாக் கிளைகளும், கட்சி உறுப்பினர்களும், கட்சி அனுதாபிகளும் இந்த இயக்கத்தில் பங்கெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது."

சேலம்-தூத்துக்குடித் திட்டங்கள்: முட்டுக்கட்டை ஏன்?

தென்னகத்தின் முன்னேற்றத்துக்கு இத்திட்டங்கள் இன்றியமையாதவை

'எழுச்சி நாள்'—தமிழக அரசின் வலிமை வாய்ந்த கோரிக்கையின் எதிரொலி

சென்னை, சூலை 4—

"சூலை 23-ம் நாளை, 'எழுச்சி நாள்' என்று தமிழகமெங்கும் கொண்டாடுவது என்று ஆட்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கும் முடிவானது, மத்திய அரசை நேருக்கு நேர் எதிர்த்து நிற்பதில் முதல் நடவடிக்கையாக இருக்கக் கூடும்.

'சேலத்தில் ஓர் எஃகு ஆலை நிறுவப்படவேண்டும் என்பதற்காகவும், தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகமாக்கும் திட்டத்தை மத்திய அரசு கிடப்பில் போடக் கருதியிருப்பதைக் கண்டிப்பதற்காகவும் திராவிட முன்னேற்றக் கழகம் இக்கிளர்ச்சியை நடத்தவிருக்கிறது"

என்று, 'நேபன்' செய்தி நிறுவனம் தனது செய்தி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது :—

"முதல்வர் அண்ணாதுரை தமது நிதி நிலை அறிக்கைச் சொற்பொழிவின்போது, 'சேலம் எஃகு ஆலையும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் தென்னாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் 'அவசியம்' என்று குறிப்பிட்டார்.

சேலத்தில் எஃகு ஆலையை அமைப்பது தொழில்நுட்ப முறையில் இயலக்கூடிய ஒன்று; பொருளாதார முறையில் பலன் தரத்தக்கது. நுட்பமான ஜப்பானியக் குழு ஒன்று சேலத்து இரும்புக் கனியையும், நெய்வேலி நிலக்கரியையும் ஆராய்ந்த பிறகு அளித்த அறிக்கையில் இது தெளிவாகக் காணப்படுகிறது. நெய்வேலி — சேலம் திட்டத்தை மத்திய அரசு எட்டாண்டுகளாக ஆராய்ந்து வருகிறது.

சேலத்தில் எஃகு ஆலையை அமைப்பதால், அதையொத்த கோவா-ஆஸ்பெட் அல்லது விசாகப்பட்டினத்தில் அமையும் ஆலைகளின் வாய்ப்புகளுக்குக் குந்தகம் ஏற்படாது.

"பொக்காரோவில் ஒரு பெரிய எஃகு ஆலையை, அமைப்பதைவிட, நாட்டின் பல்வேறு இடங்களில் சிறுசிறு ஆலைகளை அமைக்கலாம்" என்று காங்கிரசுத் தலைவரான காமராசரும் கூறினார்.

சேலம் எஃகு ஆலையைக்குறித்து மத்திய அரசு இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லையென்றும், அதன் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுவருகிறது என்றும் தமிழகத் தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறுகிறார்.

"நான்காம் திட்டத்தில் இது போன்ற ஆலைகளை அமைப்பது இருக்கின்ற ஆதார வளங்களை வைத்து ஆராயவேண்டிய அவசியமாகிறது" என்று மத்திய எஃகு, சுரங்க அமைச்சர் டாக்டர் எம். சென்னா ரெட்டி, ஏப்ரல் திங்களில் மாநிலங்கள் அவையில் கூறியது, மேற்சொன்னதை உறுதிப்படுத்துகிறது.

"இத்திட்டத்திற்கு ரூ. 93 கோடி செலவாகும்" என்று நாணய மதிப்பு மாற்றத்திற்கு முன்னர் மதிப்பிடப்பட்டது; ஆனால் இது இப்போது 35 சதவிகிதத்திற்கும் அதிகமாக மிகுந்திருக்கும்.

இத்திட்டத்தை நான்காம் திட்டத்திலேயே நிறைவேற்ற வேண்டுமென்று தமிழக அரசு விரும்புகிறது; அது கூடியமட்டிலும் மத்திய அரசின் தொழிலாக இருக்க வேண்டுமென்றும் கருதுகிறது.

"சேலத்தில் மூலப் பொருட்கள் கிடைக்கின்றன ; 150 கிலோ மீட்டருக்கு அப்பால் நெய்வேலியில் நிலக்கரி கிடைக்கிறது" என்று சேலத்தில் அமையும் எஃகு ஆலையின் பொருளாதாரச் சாதகங்களை எடுத்துக்காட்டித் தமிழகத்தின் அனைத்துக் கட்சிக் குழு ஒன்று சென்ற நவம்பரில் மத்திய அரசிடம் ஒரு மனுக் கொடுத்தது.

சேலத்தில் எஃகு ஆலை அமைவதால் போக்குவரத்துச் செலவும் குறைகிறது. டாட்டா எஃகு ஆலையும், இந்திய இரும்பு நிறுவனமும் முறையே 592—724 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து தமக்கு வேண்டிய மூலப் பொருட்களைப் பெறுகின்றன; ஆனால் சேலத்தைப் பொறுத்தவரையில் இத்தொலைவு 161 கிலோ மீட்டர்தான்.

தூத்துக்குடியில் ஆழ்கடல் துறைமுகத்தை அமைக்க வேண்டும் என்று தமிழக அரசு கோருவதும் வலிமை வாய்ந்த கோரிக்கையாகும்.

மத்திய அரசு சென்ற மார்ச்சு மாதக் கடைசி வரையிலும் தூத்துக்குடித் துறைமுக விரிவுக்காக ரூ. 5 கோடியே 22 இலட்சத்தைச் செலவிட்டிருக்கிறது. ஆனால், அதை, 'மீன் பிடித் துறைமுகமாக்குவது நல்லது; அதைப் பெரிய துறைமுகமாக்கினால் போதிய வருமானம் கிடைக்காது' என்று தமிழக அரசிடம் இப்போது கூறப்பட்டுவிட்டது.

தமிழக அரசு அதை ஏற்கவில்லை. தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சிக் குழுவானது ஒரு தீர்மானம் நிறைவேற்றித் தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகமாக்க வேண்டுமென்றும், விரிவுத் திட்டத்தை நீடிக்க வேண்டுமென்றும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிற்கும்—இலங்கைக்குமிடையேயுள்ள கடல்வழி, இடுக்கண் நிறைந்ததாக இருப்பதால், கப்பல்கள் இப்போது தூத்துக்குடியைத் தொடாமல் சென்றுவிடுகின்றன. ஆனால் சேதுசமுத்திரத் திட்டப்படி கால்வாய் அகலப்படுத்தப்பட்டுவிட்டால், தூத்துக்குடிக்கு எளிதாகக் கப்பல்கள் இருபுறமுமிருந்து வந்து போகலாம்.

தூத்துக்குடியைப் பெரிய துறைமுகமாக்கினால் இப்போது வளர்ச்சி குன்றி நிற்கும் தென் பகுதியில் வர்த்தகம் செழிக்க வழிபிறக்கும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டின்றி ஆய்வதற்கு வழிசெய்யப்பட்டிருக்கிறது.

இதுபற்றி 'டெயிலி டெலிகிராப்' ஏடு கூறுவதாவது :—

"ஆவணங்களை வெளியிடுவது பற்றிய முடிவு குறித்துப் பேரார்வம் ஏற்பட்டிருக்கிறது; (இந்தியாவில்) அதிகாரமாற்றம் ஏற்படுவதற்கு முற்பட்ட வாதப்பிரதிவாதத்திற்குள்ளான பத்தாண்டுகளைப் பற்றியவையாக அவை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

திக்கெட்டிலிருந்தும் தமிழறிஞர்கள் வருகை

தமிழக வரலாற்றில் புதுமை சேர்க்கும் மாநாடு

சென்னையில் கூடும் உலகத் தமிழ் ஆராய்ச்சி அரங்கு-அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூலை 4—

"'மறைவாக நமக்குள்ள பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை; திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்' என்ற பாரதியார் வாக்கை நினைவில் கொண்டு, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் வெற்றிக்கு ஒத்துழைத்து—இம்மாபெரும் முயற்சி வெற்றியடைய ஒவ்வொரு தமிழரும் தங்களுடைய சக்திக்கேற்ற அளவு துணைபுரிய வேண்டியது கடமையாகிறது"

என்று,சென்னையில் நடைபெறுப் உலகத் தமிழ்மாநாட்டின் அமைப்பாளர்களில் ஒருவராகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை மாநகரில், 1968 சனவரி 3-ம் நாள்முதல் 10-ம் நாள் வரையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறவிருக்கிறது.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இதன் முதலாவது மாநாடு, கோலாலம்பூரில் நடைபெற்றது.

உலகத் தமிழ் மாநாட்டின் நோக்கங்களையும், அதன் வரலாற்றையும், இம்மாநாட்டுக்காக இதுவரை நடந்தேறியுள்ள ஏற்பாடுகளையும் செய்தியாளர்களிடம் அமைச்சர் விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"உலகத் தமிழ் மாநாட்டை சென்னைப் பல்கலைக்கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில நடத்திடத் துணைவேந்தர் அனுமதித்துள்ளார்.

இம்மாநாடு தமிழகத்தின் வரலாற்றில் ஒரு யுகமாக விளங்குமென்றும், கல்வி உலகிலும் வெளிநாடுகளிலும் தமிழ் மொழியின் சிறப்புக்கள் குறித்த புதிய உணர்வை உண்டாக்கும் என்றும் நாங்கள் நினைக்கிறோம்.

பண்டையத் தமிழர், இலக்கியத்தில் மட்டுமின்றி இசை—ஓவியம்—நாட்டியம்—சிற்பம் - கட்டிடக்கலை ஆகிய இன்ன பிற துறைகளிலும் தனிச் சிறப்பெய்தியிருந்தனர்.

தத்துவம், சமயம், மருந்தியல், நீர்ப்சானம், பொறியியல், கடல் கடந்த வாணிபம் ஆகிய துறைகளிலும் இத்தனிச் சிறப்பு அவர்களுக்கு இருந்தது.

தமிழர்கள் கலைத் தூதுவர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள்.

வடமொழி, லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைப் பற்றியே ஆராய்ச்சியாகள் இருக்கக் காண்கிறோம்; ஆனால், தமிழை ஆராயும் அறிஞர்களுக்கு பண்டையக் கருத்துப் படையலோடு புதுமைக் கருத்துக்களையும் தமிழமொழி அள்ளித் தருவதாக உள்ளது.

உலகின் பல நாடுகளிலும் உள்ள அறிஞர்கள் தமிழ்மொழி ஆராய்ச்சியில் ஈடுபட—அவர்களுக்கு துணைசெய்ய எண்ணிய அறிஞர்கள் சிலர், கிழக்கத்தியப் பண்பாட்டியல் பற்றிய 26-வது அனைத்துநாட்டு மாநாட்டிற்காக 1964-ல் டில்லியில் கூடியிருந்த நேரத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றைப் பல நாட்டு அறிஞர்களைக் கொண்டு அமைத்தனர்.

இக்கழகம் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மலேசியாவில் முதல் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டிற்று; 25 நாடுகளைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் அம்மாநாட்டில் கூடியிருந்தனர்.

மாநாட்டு நிகழ்ச்சிகள்

மேற்கத்திய நாடுகளிலிருந்தும் உலகின் ஏனைய பல நாடுகளிலிருந்தும் 200-க்கு மேற்பட்ட அறிஞர்கள் சென்னை மாகநரில் நடைபெறும் மாநாட்டிற்கு வருவார்கள்.

தமிழகத்து அறிஞர் அனைவரும் இம்மாநாட்டில் பங்கேற்பர் என்பதோடு இந்தியாவின் பிற எல்லாப் பல்கலைக் கழகங்களிலிருந்தும் அறிஞர்கள் வருவார்கள். ஆக 560 பிரதிநிதிகள் வரை வரக்கூடும்.

மாநாட்டில், ஆராய்ச்சி அறிக்கைகள்மீது விவாதங்கள் நடைபெறும்.

கருத்தரங்குகளோடு, தமிழ்ப் பண்பாட்டியலை வெளிநாட்டார் நன்கறியும் வண்ணம் வேறு பல ஏற்பாடுகளும் இடம்பெறும்.

அரசியல்—பொருளாதார—சமூக—சமய—கலைத் துறைகளில் பல நூற்றுண்டுகளாகத் தமிழ் இனத்தார் அடைந்துவந்துள்ள முன்னேற்றங்களை விளக்கிடும் பொருட்காட்சி ஒன்று மாநாட்டு சமயத்தில் இடம் பெறும்.

தமிழக அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. பொருட்காட்சியை எல்லா வகையிலும் சிறப்புடையதாக்கிடச் சுறுசுறுப்பான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இசை—நாட்டிய—நாடக—கிராமியக் கலை நிகழ்ச்சிகள் மாநாடு நடைபெறும் நாட்களில் மாலை நேரங்களில் நடைபெறும்.

தமிழ் மக்கள் கையாண்ட எல்லா வகை இசைக் கருவிகளும் இடம் பெறக்கூடிய வகையில் பெரியதொரு ஊர்வலம் மாநாட்டின் முதல் நாளன்று காலை நடைபெறும்.

மாநகராட்சி மன்றத்தாரின் வரவேற்பும், கடற்கரையில் மக்கள் சார்பில் பொது வரவேற்புக் கூட்டமும் நடைபெறும்.

வெளிநாடுகளிலிருந்துவரும் பிரதிநிதிகள் தமிழ்நாடு முழுவதும் சுற்றிப்பார்த்து ஆங்காங்கு சொற்பொழிவுகளாற்றுவர்; குறிப்பாக மதுரை, திருவாரூர், திருச்சி, தஞ்சை, கோவை, சிதம்பரம் உட்பட பல இடங்களுக்கும் சென்று அங்குள்ள கலைச் சிற்பங்களைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.

இந்த மாநாட்டையொட்டி, சென்னைக் கடற்கரையில் பாரதியார்—பாரதிதாசன் – திருவள்ளுவர் ஆகியோர் சிலைகளை நிறுவிடத் தமிழக அரசு முயலும்.

பூம்புகார் நகரில் வெளிநாட்டு வணிகர்கள் எவ்வாறு பெரும் வியாபாரம் நடத்திவந்தார்கள்—தமிழர் பண்பாடு எவ்வளவு சிறப்புற ஓங்கியிருந்தது என்பதுபற்றி விளக்கிக்கூற—அதே போன்று மாதிரி நகரம் கடற்கரையில் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டு நிகழ்ச்சிகள் பொதுவாகத் தமிழிலும், வேறு சில ஆராய்ச்சி நிகழ்ச்சிகள் ஆங்கிலத்திலும் சேர்ந்தாற்போல் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இத்தனைப் பெரிய அளவிலான மாநாட்டிற்கு ரூ. 10 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.

நிதி உதவிகளை, 'பொதுச்செயலாளர் அல்லது பொருளாளர், 2-வது உலகத் தமிழ் மாநாட்டுச் செயலகம், 27-ஏ, சௌத்ரி காலனி, சென்னை-34' என்ற முகவரிக்கு அனுப்பித் தரலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]

விவசாய வருமான வரிச் சட்டம்

பரிசீலனைக் குழுவின் ஆலோசனைக்குவிடப்படும்

சென்னை, ஜூலை 3—

"விவசாய வருமான வரி சட்டத் திருத்த மசோதாவை, பரிசீலனைக் குழுவின் ஆலோசனைக்கு விட அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் கூறினார்.

"பரிசீலனைக் குழுவில், விவசாய வருமான வரிச் சட்டத்தை அறிவியல் அடிப்படையில் சீரமைப்பதற்கான திருத்தங்களும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

தமிழகம் திரும்பும் இலங்கைத் தமிழர்

வேலைவாய்ப்பு -- கடனுதவி தர தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, ஜூலை 4—

இலங்கையிலிருந்து தமிழகத்திற்குத் திரும்பிவரும் மக்களை நீலகிரிப் பகுதியில் 3,000 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்த தமிழக அரசு யோசித்து வருகிறது.

இவர்களைத் தங்களுடைய தோட்டங்களில் அமர்த்திக் கொள்ள சில மலைத் தோட்ட முதலாளிகள் முன்வந்துள்ளதாகவும் தெரிகிறது; ஆனால் தங்கள் தோட்டப் பகுதிகளை விரிவாக்குவதற்கு, அரசினர் பண உதவி செய்யவேண்டுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு எவ்வளவுபேர் வருவார்கள் என்று இப்பொழுது திட்டவட்டமாகத் தெரியவில்லை.

தேயிலைத் தோட்ட வேலை தவிர சிறு கடைகள் வைத்து வாழ்க்கை நடத்தவும், வியாபாரத்தில் ஈடுபடவும் கடன் உதவி செய்ய அர்சாங்கம் முடிவு செய்திருக்கிறது.

அந்தமான் தீவிலும் இலங்கை இந்தியர் சிலர் குடியேற்றப்படலாம் என்று தெரிகிறது.

ஐந்தாவது இரும்பாலைத் திட்டம் ஒத்திப் போடப்பட்டுவிட்டதா?

முடிவான பதிலை அமைச்சர் தரவில்லை

புதுடில்லி, ஜூன் 30—

ஐந்தாவது இரும்பாலை பற்றியும் சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றியும் இன்று நாடாளுமன்றத்தில் எழுந்த கேள்விகளுக்கு இரும்புத் துறை அமைச்சர் டாக்டர் சன்னா ரெட்டி முடிவான பதில் எதுவும் தரவில்லை.

இதுவரை ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர், பொகாரோ ஆகிய நான்கு தொழிற்சாலைகள் போடப்பட்டும்—ஏற்றுக்கொள்ளப் பட்டும்விட்டன; ஐந்தாவது தொழிற்சாலை பற்றி இன்னும் முடிவு வெளியிடப்படவில்லை.

"ஐந்தாவது இரும்பாலை காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டுவிட்டதா?"

என்று ஆரம்பித்த கேள்விக்கு, 'அவ்வாறு இல்லை' என்று டாக்டர் சன்னா ரெட்டி கூறினார்.

இரா. செழியன்:—"1962 மானிய விவாதத்தில் பதிலளித்த இரும்பு—எஃகு அமைச்சர் சி. சுப்பிரமணியம், 'சேலம் இரும்பாலை முடிவானது; விரைவில் நிறைவேற்றப்படும்' என்றும் நாடாளுமன்றத்தில் கூறினார்; 5-ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் சேலம் இரும்பாலை துவங்கப்படவில்லை. 'நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேலம் இரும்பாலை சேர்த்துக் கொள்ளப்படுமா?' என்று கேட்க விரும்புகிறேன். மேலும், ஜப்பான் போன்று வெளிநாட்டார் உதவியுடன், தங்கள் முயற்சியிலேயே சேலம் இரும்பாலையை ஆரம்பிக்க சென்னை அரசாங்கம் அனுப்பிய மனு பற்றி மத்திய அரசாங்கம் என்ன முடிவு செய்தது என்று தெரிவிக்கவும்."

அமைச்சர் சன்னா ரெட்டி:—"எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. நான்காவது திட்டம் முடிவானதும்தான், சரியான முடிவு தெரியும்."

பேராசிரியர் க. அன்பழகன்:—"ஐந்தாவது இரும்பாலை பற்றிய முடிவு நான்காவது திட்டத்தில் அடங்கியுள்ளது. அந்நியச் செலாவணி போதாத நிலையில், இரும்பாலை அமைப்பதற்குரிய அந்நியச் செலாவணி முழுவதையும் வெளிநாடு ஏதாவதுஏற்றுக் கொண்டு, இந்திய அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய அந்நியச் செலாவணி பளுவைத் தவிர்த்து விட்டால், இரும்பாலை அமைப்பதை அரசாங்கம் கவனிக்குமா?"

அமைச்சர்:—"இரும்பாலை அமைப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணி மட்டுமல்ல—உள்நாட்டு முதலீடும் தேவைப்படும். 69 சதவிகிதம் செலவு உள்நாட்டில் செய்யப்படவேண்டிவரும்; ஆக, எல்லா அம்சங்களையும் வைத்துதான் கவனிக்கவேண்டும்"

விசாகப்பட்டினம் இரும்பாலை பற்றி வந்த கேள்விகளுக்கும் முடிவான பதிலை அமைச்சர் தரவில்லை.

நிலவரி விலக்குக்கு முதற்படி!

சட்டமன்றத்தில் அமைச்சர் விளக்கம்

சென்னை, ஜூலை 3—

"121 இலட்சம் ஏக்கர் புன்செய் நிலம் சாகுபடி செய்யும் சுமார் 50 இலட்சம் விவசாயிகளுக்கு நிலவரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பது, நிலவரி நீக்கத்துக்கு முதற்படியாகும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், ஜமீன் ஒழிப்பு நஷ்ட ஈடு மானியக் கோரிக்கைமீது பேசுகையில் தெரிவித்தார்.

"தமிழ் நாட்டில் உள்ள மொத்த சாகுபடி நிலப்பரப்பில் முக்கால்பகுதி புன்செய் நிலங்கள்தான்.

புன்செய் நிலங்களின் பரப்பளவு ஒரு கோடியே 21 இலட்சம் ஏக்கர்கள்; நன்செய் நிலங்களின் பரப்பளவோ, 40 இலட்சம் ஏக்கர்கள்தான்.

புன்செய் நிலங்களின் மீதான தீர்வை ஜூலை முதல் தேதியிலிருந்து ரத்து செய்யப்பட்டுள்ளது. சுமார் 50 இலட்சம் குடியானவர்களுக்கு நிவாரணம் ஏற்பட்டுள்ளது. புன்செய் நிலத் தீர்வை மொத்தம் 1 கோடி 60 இலட்சம் ரூபாய் வருகிறது."

நன்செய் நிலங்களுக்கு நிலவரியை அரசாங்கம் நீக்கவில்லை என்று குறை கூறப்படுவதற்குப் பதிலளிக்கும் முறையில் அமைச்சர் இந்தப் புள்ளிவிவரங்களைத் தெரிவித்து மொத்த நிலங்களில் ஐந்தில் நான்கு பங்கு நிலங்களுக்குப் பலன் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்.

சாகுபடிக்கு இலாயக்குள்ள தரிசு நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டு ஐந்தாண்டுக் குத்தகைக்குப் பகிரங்க ஏலத்தில்விட நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் அரசாங்கம் அதிகாரம் பெறுவதாயும், ஒரு அங்குல நிலத்தைக் கூடத் தரிசாகப் போடுவதை அரசு அனுமதிக்காது என்றும் அமைச்சர் கூறினார்.

நடக்க இருப்பவை

5--7--67

சென்னை 10-வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு வண்ணை கல்லறைத் திடலில்; தலைவர்: மா. சவுரிமுத்து; பேசுவோர்: சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. பி. பி. ஆசைத்தம்பி, இரெ. இளம்வழுதி, பெ. சீனிவாசன், மு. இராமன், மு. வேதாசலம், மற்றும் டி. வெங்கடேசன் எம்.சி., கே. எஸ். அருணசலம், வி. பி. சாரதி, சா. அரங்கநாதன், ப. சா. சத்தியநாதன்; காலை 8-மணிக்கு அண்ணா அறிவு வளர்ச்சி மன்றம்—எம். ஜி. ஆர். இரவுப் பள்ளி துவக்க விழா; மேற்கு கல்லறை வீதியில்; தலைவர்: கே. எஸ். அருணசலம்; கொடியேற்றுபவர்: மு. வேதாசலம் எம்.எல்.ஏ.; பேசுவோர்: டி. வெங்கடேசன் எம்.சி., பா. சோ. மணி, இரா. வெங்கடேசலு.

அனகாபுத்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 6–மணிக்கு அம்மன் கோயில் திடலில்; தலைவர்: எம். நடராசன்; பேசுவோர்: மதுரை எஸ்.முத்து எம்.எல்.சி., டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ., மு. கோபால் எம்.எல்.ஏ., சி. இராமலிங்கம்.

6--7--67

சென்னை

துறைமுக—டாக் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்க அறிமுக விழாப் பொதுக்கூட்டம்; மாலை 7-மணிக்கு சாபர் சராங் தெருவில் (கலெக்டர் அலுவலகம் அருகில்); தலைவர்: கோ. செங்குட்டுவன்; பேசுவோர்; அமைச்சர்கள்: மு. கருணநிதி, செ. மாதவன் பி.காம்.,பி.எல்., மற்றும் கி. கினேகரன் எம்.ஏ., எம்.பி., நீலநாராயணன், வேலூர் டி. நாராயணன், கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., எம், வேதாச்சலம் எம்.எல்.ஏ.

பள்ளிக் கட்டிடத் திறப்பு---அமைச்சர் மாதவன் பங்கேற்பு

சென்னை 89-வதுவட்டம் இராஜா அண்ணாமலைபுரம் வாய்க்கால் கரைச் சாலையிலுள்ள மாநகராட்சி உயர்துவக்கப்பள்ளியின் முதல் மாடிக் கட்டிடத்தை, அமைச்சர் செ. மாதவன் திறந்துவைப்பார். இவ்விழா 5—7—67 மாலை 5-30 மணிக்கு, துணை மேயர் தா. கிருட்டினமூர்த்தி தலைமையில் திரு. ஏ. வெள்ளியங்கிரி முன்னிலையில் நடைபெறும்.